**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.122/2017**

**நாள் - 19.03.2024.**

**பெயர். திரு.பரசுராமன் த/பெ. பூங்காவனம்.**

**வா.சா.2 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**1.** வழக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சனை எத்தனை ஆண்டுகளாக இருக்கிறது என்றால் 2017ஆம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. எந்த தேதியில் இருந்து 2017ம் ஆண்டு எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் நாங்கள் கிரயம் கொடுத்த தேதியான 23.6.2017ல் இருந்து பிரச்சனை ஏற்பட்டது.

**2.** நான் வாதிக்கு 23.6.2017ஆம் தேதியன்று கிரயம் கொடுத்துவிட்டேன் என்றால் சரி தான். எனக்கு எத்தனை மகன்கள் என்றால் மூன்று மகன்கள் ஆகும். மற்ற மகன்களுக்கு நான் சொத்து பத்திரம் எதுவும் எழுதவில்லை என்றால் சரி தான். வாதி எத்தனாவது மகன் என்றால் மூன்றாவது மகன்.

**3.** வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் சொத்து எவ்வாறு எனக்கு உரிமையானது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் எந்த வகையில் எனக்கு உரிமையானது என குறிப்பிட்டு வாசகங்கள் சொல்லியுள்ளேனா என்றால் நான் அனுபவித்து வந்து எனக்கு பட்டா எண்.576 கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

**4.** வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் என் அனுபவத்தில் இருந்து பட்டா எண்.576 கொடுக்கப்பட்டது என்ற வாசகம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் இருக்கிறது. வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் பட்டா எண்.576 ஆகி

என் அனுபவத்தில் இருந்து வரும் அது முதல் எனக்கு பாத்தியப்பட்டு என் சுவாதீனத்தில் இருந்து வரும் கீழ்க்கண்ட சொத்தினை ' என வாசகம் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

5. வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தின்படி பட்டா எண்.576ன்படி பட்டா கொடுத்த பிறகு தான் என் சுவாதீனத்தில் இருந்து வருவதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுபவித்த வந்த சொத்திற்கு தான் பட்டா கொடுத்துள்ளார்கள். ரமணியம்மாளுக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்பதால் 2017ஆம் ஆண்டுக்கு முன்பே பிரதிவாதியிடம் தாவா சொத்து சம்பந்தமாக பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

6. 2017வருடம் ஆரம்பத்தில் பிரதிவாதியிடம் சுவாதீனம் கேட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சுவாதீனம் கேட்கவில்லை. எங்களிடம் வந்து பிரச்சனை செய்ததால் தான் புகார் கொடுத்தேன். மேற்படி பிரச்சனைக்கு பிறகு ஆவணம் எதுவும் இல்லாததால் நாமகர்த்தமாக எனக்கு உரிமையில்லாத சொத்தை என் மகனான வாதி பெயருக்கு வா.சா.ஆ.1 கிரயப்பத்திரம் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. முன்னதாகவே எழுதி வைத்துவிட்டேன்.

7. வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்திற்கு முன்பாக வேறு ஆவணம் ஏதேனும் எழுதி வைத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் அதற்கு முன்பாக எனக்கு பட்டா கொடுத்துள்ளார்கள்.

8. ஜெயசீலன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். காமக்கூர் கிராமத்தை சேர்ந்தவர். மேஸ்திரி ஆகும். வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தை 23.6.2017ஆம் தேதியன்று எழுதிவிட்டு, உடனடியாக காவல்நிலையத்தில்

**புகார் கொடுத்துவிட்டு, 2017ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமே இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி வீடு கட்டுவதற்காக கல், மணல், ஜல்லி ஆகியவை எடுத்து வந்திருந்தார், அப்போது தகராறு செய்ததால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு நீதிமன்றத்தில்** Stay **வாங்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்திருந்தார்.**

**9. வழக்கு சொத்தில் ஷீட்டு போட்ட கட்டிடம் இருந்ததா என்றால் இருந்தது. மேற்படி ஷீட்டு போட்ட கட்டிடத்தில் டீக்கடையை சுப்பிரமணியின் மகள் மலர் என்பவருக்கு வாடகைக்கு விட்டிருந்தேன் என்றால் சரியல்ல. என் தந்தை அனுபவித்து இருந்தார். நான் தான் டீக்கடை வைத்து 50 வருடங்களாக அனுபவித்து வந்தேன்.**

**10. வழக்கறிஞரிடம் யார் வழக்கு தாக்கல் செய்ய சங்கதிகள் கூறியது என்றால் நான் தான் கூறினேன். இவ்வழக்கில் தடையுத்தரவு போட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். தடையுத்தரவு அவமதித்ததாக மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். பூட்டை உடைத்து பிரதிவாதி உள்ளே சென்றார். அதனால் மனு தாக்கல் செய்தேன்.**

**11. வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் காலி இடம் என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரி தான். வழக்குரையில் சொத்து விவரத்தில் காலி இடம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான்.**

**12. வழக்கு சொத்தில் பிரதிவாதி தகர ஷீட்டு போட்டு டீக்கடை நடத்தி வந்தார் என்றாலும், கூட்டு பட்டா எண்.684ஆக இருந்தது என்றாலும், என் அனுபவத்தில் இல்லை என்றாலும், தற்போது நான் சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.**

13. ரமணியம்மாளுக்கு கலா, செல்வி, பிரதிவாதி ஆகியோர் மகள்கள் என்றால் சரி தான். நான் ரமணியம்மாளின் வாரிசுகளுக்கு அவரது பாக சொத்தில் பிரச்சனை ஏற்பட்டு, 13.2.2009தேதியன்று பஞ்சாயத்து செய்து வழக்கு சொத்தையும் மற்றும் ரமணியம்மாளின் பாக சொத்தை தனித்தனியாக கிரயப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் நான் இல்லை அது பற்றி எனக்கு தெரியாது.

14. பரசுராமன் என்று என் ஊரில் வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் சாட்சி இல்லை என்று சொல்லிவிட்டு மீண்டும் இருக்கிறார் என்று சாட்சியமளிக்கிறார். அந்த நபர் ஊரில் இருக்கிறாரா, காலனியில் இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது. மேற்படி ஊரில் உள்ள பரசுராமனின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது.

15. மேற்படி என்னிடம் காண்பிக்கப்படும் 13.2.2009 தேதியிட்ட ஆவண எண்.1216/2009 என்ற ஆவணத்தில் சாட்சிகள் கையொப்பத்தில் பூங்காவனம் மகன் பரசுராமன் என கையொப்பம் செய்துள்ளது நான் தான் என்றால் அது என்னுடைய கையொப்பம் இல்லை. என் கையொப்பத்தை ஆங்கிலத்தை தவிர வேறு எதிலும் போடமாட்டேன்.

16. தாமோதரன் என்பவரை யார் என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பத்திர பதிவு செய்ய போயிருந்தால் தான் எனக்கு தெரியும், அதனால் எனக்கு தெரியாது. தாமோதரன் சாட்சி கையொப்பம் செய்தாரா என்று கேட்காததற்கு முன்பாகவே நான் பத்திர பதிவு போயிருந்தால் தான் எனக்கு தெரியும் என சாட்சியமளிப்பதால் மேற்படி 13.2.2009 தேதியிட்ட கிரய ஆவணத்தில் நான் தான் தாமோதரன் உடன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**17.** குண்டனிலி கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து சம்பந்தமாக 13.2.2009 தேதியன்று பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 13.2.2009தேதியன்று எழுதப்பட்ட பதிவு செய்யப்படாத ஆவணத்திலும் நானும் மேற்படி வெங்கடேசனும் தான் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அது என்னுடைய கையொப்பம் இல்லை.

**18.** நான் என் கையொப்பம் இல்லை என்று மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ரமணியம்மாளுக்கும் அவரது வாரிசுகளுக்கும் உரிமை என்றாலும், சூதுமார்க்கமாக பட்டாவையும் கிரயப்பத்திரத்தையும் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

**19.** நான் என் மகனுடன் கூட்டு சேர்ந்துக்கொண்டு நான் தான் என் மகன் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்/- பி.டி. சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆரணி.